1970 மார்ச் 21]

திரு. எம். எஸ். மணி : திருச்சியில் சிறைச்சாலை இருக்கிற இடம் கந்தக பூமி. மேலும் அந்த இடத்தில் தண்ணீர் பற்றுக்குறை வேறு. ஆகவே காவேரியில் இருந்து அந்தச் சிறைச்சாலைக்குத் தண்ணீர் கொண்டுபோக ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்தச் சிறைச்சாலையில் தண்ணீர் இல்லாமல் நான் கஷ்டப்பட்டது கூட நினைவுக்கு வருகிறது. ஆகவே அங்கே போதுமான தண்ணீர் வசதி அளிக்க திட்டமிடப்படவேண்டும் என்று சிறைச்சாலை அதிகாரியிடத்தில் சொல்லியிருக்கிறோம். அவர்கள் இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள்.

திரு. எம். பூபதி : திருச்சி சிறைச்சாலையில் மஞ்சள் காமாலை காரணமாக எத்தனை பேர்கள் பாதிக்கப்பட்டார்கள்? எத்தனை பேர்கள் இறந்தார்கள்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஒருவரும் இறக்கவில்லை என்று முன்பே சொன்னேன். 182 பேர்கள் பாதிக்கப்பட்டார்கள்.

கதர் துணிகளுக்கு சாயம் இடுதல்

* 486 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1968-வது ஆண்டில், காதி இலாகாவில் கையினால் டை அடிப்பதற்கு பதிலாக, ஈரோடு மில்லில் ஆர்டர் கொடுத்து டை அடிக்கப்பட்டது உண்மையா ?

(இ) அதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : கையினால் டை அடிப்பதற்குக் கட்டணம் ரூ. 1½. மில்லில் டை அடிப்பதற்கு 10 அணா. இப்படி ஊழல் நடந்திருப்பது கண்டு பிடிக்கப்பட்டு ஆடிட் ரிப்போர்ட்டில் கொடுக்கப்பட்டிருக்கிறதே, அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அப்படி குற்றங்கள் இருப்பதாக என்னிடத்தில் உள்ள ஆடிட் ரிப்போர்ட்டில் எதுவும் இல்லை.

Draft Ordinance on Co-operation.

* 487. *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Co-operation be pleased to state :

(*a*) whether any draft Ordinance on the Co-operative Department in this State has been forwarded to the Union Government; and

(*b*) if so, the details thereof?